இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 27-03-2025



# நிதித்தனமாகப் பேசுங்கள்!

வழக்கம் போல தமிழ்நாட்டைப் பற்றி ஏளனமாகப் பேசி இருக்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். அவர் அப்படி பேசவில்லை என்றால்தான் அதிர்ச்சிக்குரியதாக இருக்கும்.

ஒன்றிய அரசின் 2025-26 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. இதில் கலந்து கொள்ள வந்திருந்தார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.

**“ஒன்றிய அரசு கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கு பல்வேறு திட்டங்களைக் கொடுத்துள்ளது” என்று சொல்லி இருக்கிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். அப்படியானால் பத்து திட்டங்களையாவது வரிசையாகச் சொல்லி இருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை. அப்படி இருந்தால்தானே சொல்லி இருப்பார்.**

அவர் வெளியிட்ட நிதிநிலை அறிக்கைகளில் தமிழ்நாடு என்ற பெயராவது இருந்ததா? எந்த மாநிலத்துக்காவது தேர்தல் வந்தால் அந்த மாநிலத்துக்காக கண்துடைப்பு திட்டங்களை அறிவிப்பார்கள். அவ்வளவுதான்.

இப்போது மோடி நாற்காலியைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் இரண்டு பேர், ஆந்திர சந்திரபாபுவும், பீகார் நிதிஷ்குமாரும். அதனால் அவர்களை மகிழ்விக்க, அந்த மாநிலத்துக்குத் திட்டங்களை அறிவித்திருப்பார்கள். மற்றபடி வேறு மாநிலங்களையும் கண்டுகொள்ள மாட்டார்கள். குறிப்பாக தமிழ்நாடு அவர்களது வரைபடத்தில் இருக்காது. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலத்தின் பெயரைச் சொன்னாலே பல் வலி வந்து விடும் என்று பயப்படக் கூடிய ஆட்சிதான் பா.ஜ.க. ஆட்சி.

“தமிழ்நாட்டில் வேறு ஒரு விவாதம் நடந்து வருகிறது. தமிழ்நாடு ஒரு ரூபாய் கொடுத்தால் திருப்பி 27 பைசா கூட வழங்கப்படவில்லை என்ற வாதமே தவறாகும். கொஞ்சம் ஏளனமாகச் சொல்ல வேண்டுமானால், தமிழ்நாட்டிற்கு சென்னையும் கோவையும்தான் அதிக வரி கொடுக்கிறது. அரியலூர் மற்றும் கோவில்பட்டியில் இருப்பவர்கள் எங்களுக்கு என்ன செய்கிறீர்கள் என்று கேட்டால், சென்னையும் கோவையும், ‘நாங்க தான் பணம் கொடுக்கிறோம். அதனால் எங்களுக்கு பணம் திருப்பி கொடுங்க, அரியலூரும் கோவில்பட்டியும் எக்கேடு கெட்டால் எங்களுக்கு என்ன?’ என்று கேட்டால் எப்படி இருக்கும்?” என்று கேட்டு இருக்கிறார் நிர்மலா சீதாராமன்.

தமிழ்நாடு அரசு ஒரு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்கிறது. அதனை எடுத்துப் பாருங்கள். ‘அனைவருக்குமான நிதிநிலை அறிக்கையாக’ அது அமைந்திருக்கும். அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய நிதி நிலை அறிக்கையாக அது அமைந்திருக்கும். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அதிகமாக உதவுபவர்களுக்கு மட்டுமல்ல, யார் அடித்தட்டில் இருக்கிறார்களோ அவர்களுக்கு உதவுவது மாதிரியான நிதிநிலை அறிக்கையாக தமிழ்நாட்டின் அறிக்கை இருக்கும்.

‘எங்களுக்கு ஏன் தரவில்லை’ என்றுதான் நாங்கள் கேட்கிறோமே தவிர, அவர்களுக்கு ஏன் அதிகம் தருகிறீர்கள்? என்று நாம் கேட்கவில்லை.

தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய அடிப்படை நிதியைக் கூட தர மறுக்கிறீர்களே என்பதுதான் எங்களுடைய வேதனை. பள்ளிக் கல்விக்கான ரூ.2000 கோடி தர வேண்டிய இடத்தில் ரூ.1500 கோடியை கொடுத்துவிட்டால் கூட அது குறையாகச் சொல்ல முடியாது. ஆனால் மொத்தமாகத் தரவில்லை

ஒன்றிய பா.ஜ.க. அரசு. ‘ஒன்றிய அரசு தராவிட்டாலும் நாம் அந்த நிதியைத் தருவோம்’ என்று சொல்லி இருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

இயற்கை பேரிடருக்காக ரூ.37 ஆயிரம் கோடி கேட்டுள்ளோம். அதில் பாதியைக் கொடுத்திருந்தால் கூட அதைக் குறையாகச் சொல்ல முடியாது. ஆனால் ஒரு விழுக்காடு பணத்தைக் கூடத் தரவில்லை ஒன்றிய பா.ஜ.க. அரசு. நிதி நெருக்கடியில் இருந்த போது தமிழ்நாடு அரசு தன்னுடைய நிதியில் இருந்து நிவாரண உதவிகளையும் பணிகளையும் மேற்கொண்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமாகவும், உட்கட்டமைப்புகளை மறுசீரமைக்கவும் தமிழ்நாடு அரசு மாநிலப் பேரிடர் நிதியில் இருந்து இதுவரை 2,477 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது.

பத்து சிறப்புத் திட்டங்களை அறிவித்து, அதில் ஐந்தை நிறைவேற்றிக் காட்டி இருந்தால் கூட ஒன்றிய அரசுக்கு நன்றி சொல்லலாம். அறிவித்தது ஒரே ஒரு எய்ம்ஸ் மருத்துவமனை. அதையும் ஏழு ஆண்டுகளாகக் கட்டவில்லை.

16 லட்சம் குடிநீர் இணைப்புகளை தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு வழங்கி இருப்பதாகச் சொல்லி இருக்கிறார் நிர்மலா. இதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். குடிநீர் இணைப்பு கொடுத்தோம், வீடு கட்டித் தந்தோம் என்று. அதில் என்ன உண்மை?

*** ஒன்றிய அரசு வீடுதோறும் குடிநீர் (Jal Jeevan Mission) என்ற திட்டத்தை வைத்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய 4,142 கோடி ரூபாயில், 732 கோடி ரூபாயை மட்டுமே வழங்கியுள்ளது. நிதியின்மையினால் திட்டங்களின் செயல்பாடு சுணங்கக் கூடாது என்பதால் தமிழ்நாடு அரசு தனது நிதியைக் கொடுத்து இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.**

*** ஒன்றிய அரசின் திட்டமான பிரதமர் நகர்ப்புர வீட்டு வசதித் திட்டத்தின் (PMAYU), கீழ் வழங்கப்படும் மானியத் தொகையானது, 1.5 இலட்சம் ரூபாயாகவே இருக்கிறது. இத் திட்டத்தினைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசானது, வீடு ஒன்றிற்கு 12 முதல் 14 இலட்சம் ரூபாயை தன் சொந்த நிதியின் மூலம் மானியமாகக் கொடுத்து, ஏழ்மை நிலையில் இருக்கும் மக்களின் சொந்த வீட்டிற்கான கனவினை நிறைவேற்றியுள்ளது.**

*** ஒன்றிய அரசின் பிரதமர் ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் (PMAYG) கீழ் வழங்கப்படும் மானியத் தொகையானது, வீடு ஒன்றிற்கு 0.72 இலட்சம் ரூபாயாக, எட்டு வருடங்களுக்கும் மேலாக இருந்து வருகிறது. ஆனால் தமிழ்நாடு அரசு, வீடு ஒன்றிற்கு 1.72 இலட்சம் ரூபாயை மானியமாக வழங்கி வருகிறது. நமது அரசு செயல்படுத்தி வரும் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ், மாநில அரசின் மானியமானது 3.53 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இது, ஒன்றிய அரசு தன்னுடைய திட்டத்திற்கு வழங்கும் மானியத்துடன் ஒப்பிடுகையில் ஐந்து மடங்கு அதிகம்.**

ஒன்றிய அரசு தன்னுடைய திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியினை தமிழ்நாடு அரசின் மீது திணிப்பதால், மாநில அரசின் முன்னுரிமைத் திட்டங்களுக்குப் போதிய நிதியளிப்பு இல்லாமல் போகிறது. இதுதான் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு வழங்கும் நிதி நிலைமை ஆகும்.

**நிதி அமைச்சர் பதவியில் இருப்பவருக்கு நிதித்தனமாகப் பேச வேண்டும். அவருக்கு அது தெரியாது. ஏளனமாகத்தான் பேசத் தெரியும். கிண்டல் கேலிதான் தெரியும். அதனால்தான் அவரை நிதி அமைச்சராக வைத்திருக்கிறார் மோடி.**

**எந்த முகத்தை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டுக்கு வந்து கலந்துரையாடல் எல்லாம் நடத்துகிறீர்கள்? கூச்சமாக இல்லையா?**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.3.2025) தலைமைச் செயலகத்தில், மறைந்த பெரியவர் இளையபெருமாள் அவர்களின் மருமகள் திருமதி எஸ்தர் ரூபி குடும்பத்தினருடன் சந்தித்து, சமூக சீர்திருத்தத்தின் பெருமைமிகு தலைவர்களில் ஒருவரும், மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும், அகில இந்திய தீண்டாமை ஒழிப்புக் கமிட்டித் தலைவராகவும் இருந்த பெரியவர் இளையபெருமாள் அவர்களைச் சிறப்பிக்கும் வகையில், கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் நூற்றாண்டு நினைவரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்து, நினைவரங்கம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். உடன் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனைச்செல்வன், எம்.பாபு, எஸ்.எஸ்.பாலாஜி, முகமது ஷா நவாஸ் ஆகியோர் உள்ளனர்.

### தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில்

# ரூ.133.32 கோடியில் வெள்ளிக் கொலுசு வளாகம் - 5 தொழிற்பேட்டைகள் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 27-**

**தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில் ரூ.133.32 கோடி மதிப்பீட்டில் அடுக்குமாடி வெள்ளி கொலுசு உற்பத்தி வளாகம், தொழிலாளர்கள் தங்கும் விடுதி, 5 புதிய தொழிற்பேட்டைகள் மற்றும் 5 பொது வசதி மையங்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.3.2025) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில், ரூ.57.72 கோடி செலவில் சேலம் மாவட்டம், அரியகவுண்டம்பட்டியில் அடுக்குமாடி வெள்ளி கொலுசு உற்பத்தி வளாகம், கோயம்புத்தூர் மாவட்டம், குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் தொழிலாளர்கள் தங்கும் விடுதி, காஞ்சிபுரம், கடலூர், திருவாரூர், சேலம், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் 170.21 ஏக்கர் பரப்பில் ரூ.40.27 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள 5 தொழிற்பேட்டைகள் மற்றும் சேலம், தூத்துக்குடி, கன்னியா குமரி, கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் ரூ.35.33 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 5 பொது வசதி மையங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வேலை உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. இவை அளவான முதலீட்டில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கி ஒட்டுமொத்த சமூக பொருளாதார மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும், வளர்ச்சிக்கும் பெரும்பங்களிப்பு செய்து வருகின்றன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**சேலம் மாவட்டம், அரியகவுண்டம்பட்டியில் அடுக்குமாடி வெள்ளி கொலுசு உற்பத்தி வளாகம்**

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் சேலம் மாவட்டம் வெள்ளிக் கொலுசு உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில், அரிய கவுண்டம்பட்டியில் 99,346 சதுர அடி பரப்பளவில், தரை மற்றும் மூன்று தளங்களுடன், ரூ.25.34 கோடி செலவில், 102 தொழிற்கூடங்கள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாகம் முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இதன்மூலம், 2000 நபர்கள் நேரடியாக வும், 4000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெறுவர்.

**கோயம்புத்தூர் மாவட்டம், குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் தொழிலாளர்கள் தங்கும் விடுதி**

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் குறிச்சி தொழிற்பேட்டையில் 1.49 ஏக்கர் பரப்பளவில் ரூ.32.38 கோடி செலவில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் சுமார் 618 தொழிலாளர்கள் தங்கும் வகையில் 111 அறைகள் கொண்ட தொழிலாளர்கள் தங்கும் விடுதி முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இவ்விடுதியில் மின்தூக்கி வசதி, தீயணைப்பு வசதி, குடிநீர் வசதி, விளையாட்டுப் பகுதி, சலவையகம், பொதுவான சமையலறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இவ்விடுதியானது குறிச்சி மற்றும் சுற்றியுள்ள தொழிற்பேட்டைகளில் பணி புரியும் தொழிலாளர்கள் தங்குவதற்கு வசதியாக அமைக்கப்பட்டுள்ளது.

**முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட புதிய ஐந்து தொழிற்பேட்டைகளின் விவரங்கள்**

**திருவாரூர் மாவட்டம், வண்டாம்பாளை தொழிற்பேட்டை**

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், வண்டாம்பாளை கிராமத்தில் 18.83 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்பட உள்ளது. இத்தொழிற்பேட்டையில் முதல் கட்டமாக 4.27 ஏக்கரில் ரூ.2.28 கோடி செலவில் 20 தொழில் மனைகள் மேம்படுத்தப்பட்டு தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய தயாராக உள்ளது. இத்தொழிற்பேட்டை உருவாக்கத்தின் மூலம் சுமார் 500 நபர்கள் நேரடியாகவும், 1000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெறுவர்.

**கடலூர் மாவட்டம், காடாம்புலியூர் தொழிற்பேட்டை**

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், காடாம்புலியூர் கிராமத்தில் 27.84 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்பேட்டையில் ரூ.6.41 கோடி செலவில் 82 தொழில் மனைகள் மேம்படுத்தப்பட்டு தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய தயாராக உள்ளது. இத்தொழிற்பேட்டை உருவாக்கத்தின் மூலம் சுமார் 500 நபர்கள் நேரடியாகவும், 1000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெறுவர்.

**தூத்துக்குடி மாவட்டம், லிங்கம்பட்டி தொழிற்பேட்டை**

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், லிங்கம்பட்டி கிராமத்தில் 60.00 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்பட உள்ளது. இத்தொழிற்பேட்டையில் முதல் கட்டமாக 11.11 ஏக்கர் பரப்பளவில் ரூ.2.51 கோடி செலவில் 31 தொழில் மனைகள் மேம்படுத்தப்பட்டு தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய தயாராக உள்ளது. இத்தொழிற்பேட்டை உருவாக்கத்தின் மூலம் சுமார் 2000 நபர்கள் நேரடியாகவும், 3000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெறுவர்.

**சேலம் மாவட்டம், உமையாள்புரம் தொழிற்பேட்டை**

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், உமையாள்புரம் கிராமத்தில் 20.07 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்பட உள்ளது. இத்தொழிற்பேட்டையில் முதல் கட்டமாக 15.76 ஏக்கரில் ரூ.1.60 கோடி செலவில் 43 தொழில்மனைகள் மேம்படுத்தப்பட்டு தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய தயாராக உள்ளது. இத்தொழிற்பேட்டை உருவாக்கத்தின் மூலம் சுமார் 500 நபர்கள் நேரடியாகவும், 1000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெறுவர்.

**காஞ்சிபுரம் மாவட்டம், வையாவூர் தொழிற்பேட்டை**

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், வையாவூர் கிராமத்தில் 42.06 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்பேட்டை 42.06 ஏக்கரில் ரூ.27.47 கோடி செலவில் 115 தொழில்மனைகள் மேம்படுத்தப்பட்டு தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய தயாராக உள்ளது. இத்தொழிற்பேட்டை உருவாக்கத்தின் மூலம் சுமார் 1800 நபர்கள் நேரடியாகவும், 3000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெறுவர்.

**ஐந்து புதிய பொது வசதி மையங்களை திறந்து வைத்தல்**

சேலம் மாவட்டம், சேலம் (தெற்கு) வட்டம், தாதகாபட்டியில் அச்சுத் தொழில் குழுமத்திற்கு ரூ.13.46 கோடி செலவிலும், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், கல்மேட்டில் உப்புத் தொழில் குழுமத்திற்கு ரூ.4.26 கோடி செலவிலும், கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கோவளத்தில் மகளிர் பல்வகை உணவுப் பொருட்கள் குழுமத்திற்கு ரூ.6.65 கோடி செலவிலும், கோயம்பத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், வெள்ளலூரில் அச்சு வார்ப்பு குழுமத்திற்கு ரூ.4.44 கோடி செலவிலும், ஈரோடு மாவட்டம், ஈரோடு சிட்கோ தொழிற்பேட்டையில் பொது கிடங்கு குழுமத்திற்கு ரூ.6.52 கோடி செலவிலும், என மொத்தம் ரூ.35.33 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள ஐந்து புதிய பொது வசதி மையங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் / முதன்மைச் செயலாளர் ஆ.கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டனர்.




சென்னை, எழிலகத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறையின் 2025–2026 ஆம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்கக் குறிப்பு, அறிவிப்புகள், பொது விநியோகம் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (25.03.2025) நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அ. சண்முகசுந்தரம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த.மோகன், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு காவல்துறைத் தலைவர் ரூபேஷ் குமார் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.